ஹபராதுவ பிரதேச சபை
காலி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, காலி மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,255,685 தொகைக்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூபா 6,083,566 இற்காக தொகையினை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்காமையால் நடைமுறை பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 364,410 இற்கான மின்சார இருப்பு தொகையொன்று சேர்கப்பட்டிருந்தமையினால் வருட இறுதியிலுள்ள இருப்பு மீதி அப்பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 45,131,053 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணை பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமிமைகளின் கூட்டுத்தொகை ரூபா 42,518,088 தொகையாக இருந்தது.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

2008 ஆண்டு முதல் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 601,430 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியினை இனங்கண்டு உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு, கணக்குகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் மாற்றமின்றி முன் கொண்டு வந்து காணபப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,383,940 தொகைக்கான 06 பெறவேண்டிய

கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2008 ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் மாற்றமின்றி முன் கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 2,901,253 தொகைகான 05 செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக் கூற்றுகளில் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 91,225,382 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பான நாளதுவரை ஆகப்பட்ட, வகுப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் முறையான அட்டவணைகளும் ரூபா 767,252 தொகைக்கான மின்சார இருப்புக்கள் மின்சார பண்ட பதிவேடும், ரூபா 148,965 தொகைக்கான பலவினக் கடன்பட்டோர் மற்றும் ரூபா 8,923,043 தொகைக்கான கடன் கொடுத்தோர் மீதி தொடர்பான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடும், கூட்டத்தொகை ரூபா 13,616,895 தொகைக்கான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக வைப்புக்கள் பதிவேடும், ரூபா 304,869 தொகைக்கான உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதியினை உறுதிப்படுத்தும் கடிதங்களும் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 570 மற்றும் 571(1)(2) | 02 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத் தொகை ரூபா 1,826,957 தொகைக்கான 110 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,913,387 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,690,543 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 19,603,930 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வீதவரி**

ஆண்டின் போது சிட்டையிடப்பட்டவையுடன் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 13,140,698 தொகையான வீதவரியில் ஆண்டின் போது 47 சதவீதமான பெறுமதியொன்றே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.2 ஏக்கர் வரி**

சிட்டையிடப்பட்டவைகளுடன் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 11,020 தொகைக்கான ஏக்கர் வரி தொகை ஆண்டின் போது ரூபா 540 தொகையான குறைந்த பெறுமதி ஒன்றே அறவிடப்பட்டிருந்தது.

மேற்கூறிய 2.2.1 மற்றும் 2.2.2 பந்திகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை வீதவரி மற்றும் ஏக்கர் வரியினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1)அ இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 11,396,887 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 3,127,999 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) சபையில் கடமையாற்றும் 19 ஊழியர்கள் பெற்றிருந்த சம்பளம் அற்ற விடுமுறை 606 நாட்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 636,907 இற்கான தெகையொன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வருடாந்த இடமாற்ற முறைமையொன்று செயற்படாமையினால் சபையில் கடமையாற்றும் சில உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட 11 பேர்கள் இடையறாமல் 10 வருடங்களை விட கூடிய காலம் முதல் கடமையாற்றி வருகின்றனர்.

(ஆ) 2016 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இரண்டு நூலகங்களில் இருந்து காணாமல் போன 21 புத்தகங்கள் மற்றும் வாசகர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்படாத 59 புத்தகங்கள் காணப்பட்டன என வெளிப்படுத்தப்பட்டது.எனினும் இந்த புத்தகங்களின் பெறுமதியினை தீர்மானித்து, சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 07 திகதி சேதனப் பசளை செயற்திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தினால் அந்த செயற்திட்டத்தினால் ரூபா 245,000 இற்கான பிலிசரு செயற்திட்டத்தினால் கிடைத்திருந்த பெறுமதி கணிக்கப்படாத மேலும் கிரஷர் இயந்திரம் மற்றும் ஹலர் இயந்திரப் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுக் காணப்பட்டது.

(ஆ) 2015 ஜுலை 10 திகதி 02/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் நீண்டகாலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட 07 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையினால் பயன்படுத்தப்படும் பல்வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான கூட்டுத்தொகை 34,872,063 தொகைக்கான 06 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு 2008 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கியுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 23,952,335 தொகைக்கான சேமிப்பும், 07 வருடமான விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 72,552,097 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கடந்த பல வருடங்களின் போது முன் கொண்டுவரப்படும் வரி மீதிகள், முற்பணக் கணக்கின் மீதி, தொங்கல் கணக்கின் மீதி, கடன்கொடுத்தோர் கணக்கின் மீதிகளை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.<br>(ii) வங்கிக் கணக்குகளிடையே காணப்பட்ட மீதிகளினை தீர்த்திருக்கவில்லை.<br>(iii) நிலுவை வருமான மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |